சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள் கூட்டம் நேற்று சின்னமலையில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் – மா.சுப்பிரமணியன் முன்னிலையில் நேற்று (9-6-2025) கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., ஆலோசனை வழங்கி உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., தலைமை செயற்குழு உறுப்பினர் மு.மகேஷ்குமார், பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், தொகுதி பொறுப்பாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன், ஊடகப்பிரிவு தமிழ் கா.அமுதரசன், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணைச் செயலாளர் எம்.எஸ்.ஹரி பாபு, உள்ளிட்ட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி அணியின் அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, 156-வது வார்டு, முகலிவாக்கத்தில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.2.76 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சென்னை மாநகராட்சி தொடக்கப் பள்ளியை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் திறந்து வைத்தார். அருகில் மண்டலக் குழுத் தலைவர் என்.சந்திரன், மாமன்ற உறுப்பினர் ஜெ. செல்வேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா. பாஸ்கரன், கீதா ஆனந்தன் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் உள்ளனர்.

தமிழ்நாடு முதல்வரின் தன்னிகரில்லாக் கனவு நிறைவேறும்!

2030 க்குள் தமிழ்நாடு 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாறும்!

வேளாண்மை சாராத வேலைவாய்ப்புகள் குறித்த மாநில திட்டக்குழுவின் 4 அறிக்கைகளை முதல்வரிடம் சமர்ப்பித்து – மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் உறுதி!

சென்னை, ஜூன் 10 -

மாநில திட்டக்குழுவின் செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன் அவர்கள், மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட 4 அறிக்கைகளை முதலமைச்சரும், மாநில திட்டக் குழுவின் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (9.6.2025) தலைமைச் செயலகத்தில் சமர்ப்பித்த பிறகு அளித்த செய்தியாளர் சந்திப்பில், "தமிழ்நாடு முதல்வரின் தன்னிகரில்லாக் கனவு நிறைவேறும்!" என்றும் "2030 க்குள் தமிழ்நாடு 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாறும்!" என்றும் குறிப்பிட்டார்.

அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:

இன்று காலையில் மாநில திட்டக் குழுவின் சார்பில் தயாரிக்கப்பட்ட 4 அறிக்கைகளை முதலமைச்சர் அவர்களிடம், மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவர் என்கின்ற வகையில் நானும், துணை முதலமைச்சரும், மாநில திட்டக் குழுவின் அலுவல்சார் துணைத் தலைவரும் இணைந்து வழங்கினோம்.

அதில் முதல் அறிக்கை - தமிழ்நாட்டில் இருக்கும் கிராமப்புறங்களில் ஏற்பட்டிருக்கும் வேளாண்துறை அல்லாத வேலை வாய்ப்புகள் அதில் எப்படி நடந்திருக்கிறது, எவ்வளவு அதிகமாகியிருக்கிறது, எவ்வளவு குறைந்திருக்கிறது என்பது குறித்த ஆய்வு.

இந்த ஆய்வு எப்படி மேற்கொண்டோம் என்றால், 10 வருடங்களுக்கு முன்பு நான் தனிப்பட்ட முறையில் ஒன்றிய திட்டக்குழுவிற்காகச் செய்த ஆய்வு. 12 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த 12 கிராமங்களில், வேளாண் துறையில் இல்லாத வேலை வாய்ப்புகள் பற்றி ஆய்வு செய்தோம். அதே கிராமங்களுக்குச் சென்று இந்த 10 வருடங்களின் இடைவெளியில் எது போன்ற மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்பது குறித்து, ஒரு மீள் ஆய்வு மேற்கொண்டு அந்த ஆய்வின் அடிப்படையில் அறிக்கை தயாரிக்கப்பட்டு இன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் ஆய்வறிக்கையை சமர்ப்பித்தோம்.

சில இலக்குகள்!

இரண்டாவது ஆய்வறிக்கை - sustainable development goals என்று சொல்லக்கூடிய வளம் குன்றாத வளர்ச்சி இலக்குகள் குறித்து ஐக்கிய அமைப்புகளின் வழிமுறைகளின்படி அறிக்கை தயாரிக்கப்பட்டு நம் தமிழ்நாடு தற்போது எங்கிருக்கிறோம். 2030-க்குள் அதற்கு சில இலக்குகள் இருக்கின்றன. அந்த இலக்குகளை நாம் எவ்வளவு தூரம் அடைந்திருக்கிறோம், இன்னும் செல்ல வேண்டிய தூரம் எவ்வளவு என்பது பற்றி ஆய்வு செய்து அதற்குப் பிறகு அந்த இலக்கை அடைய வேண்டும் என்றால், என்ன

செய்ய வேண்டும் என்பதையும் திட்டமிட்டு 650 பக்கத்திற்கு மேலான அறிக்கையை நமது முதலமைச்சர் அவர்களிடம் வழங்கியிருக்கிறோம். அதில் எதிலெல்லாம் முதலிடத்தில் இருக்கிறோம். எதிலெல்லாம் முன்னணியில் இருக்கிறோம், எதிலெல்லாம் நன்றாக வேலை செய்துகொண்டிருக்கிறோம். இன்னும் நாம் கவனிக்க வேண்டிய துறைகள் எவை? என்பதையெல்லாம் கண்டறிந்து அதையும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டு, அரசுக்கு அளித்துள்ளோம்.

தொழில்நுட்ப மாற்றங்கள்!

மூன்றாவது அறிக்கை - உங்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். தமிழ்நாடு வாகன உற்பத்தியில் முன்னிலையில் இருக்கும் மாநிலம். அந்த வாகன உற்பத்தியை அனைத்து தொழில்நுட்பத்திலும் ஏற்படக்கூடிய மாற்றங்கள் போல் வாகன உற்பத்தியிலும் மிகப்பெரிய அளவில் தொழில் நுட்ப மாற்றங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன.

10, 15 வருடங்களுக்கு முன்பு காரை பார்த்தோம் என்றால், முழுவதும் Mechanical Device ஆக இருந்தது என்ற காலம் மாறி, இப்போது ஒரு கார் அல்லது மோட்டார் சைக்கிள் எடுத்துக் கொண்டோம் என்றால், பாதிதான் Mechanical, பாதி Electronics ஆக மாறி இருக்கிறது. அதில் இன்னும் அதிகமாகிக்கொண்டுதான் செல்லும் என்று எதிர்பார்க்கின்ற சூழலில், மின் வாகனமாக மாறிக் கொண்டிருக்கிறது. Hybrid வந்துகொண்டிருக்கிறது. இப்படி பல தொழில்நுட்ப மாற்றங்கள் அசுர வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நேரத்தில், அதில் நாம் முன்னணி இடத்தை தக்கவைத்துக்கொள்வதற்குநமதுமாநிலம்என்னவெல்லாம் செய்ய வேண்டும், அதற்கான செயல் திட்டங்கள் என்னென்ன தேவைப்படுகின்றன என்பது குறித்து ஆய்வை நடத்தி, ஆய்வரங்கத்தை நடத்தி அதில் வந்திருந்த நிபுணர்கள் என்னவெல்லாம் கூறினார்கள் என்பதைத் தொகுத்து அதனை ஒரு அறிக்கையாகத் தயாரித்து - நமது எதிர்காலம் வாகன உற்பத்தியில் என்னவாக இருக்க வேண்டும் என்பது குறித்தும், அதற்கு உண்டான பாதை என்ன? வழி என்ன? வகை என்ன? என்பது குறித்தும் தெளிவாக எழுதி அதையும் ஒரு அறிக்கையாக அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறோம்.

நான்காவது அறிக்கை - Knowledge Academy என்று சொல்லக்கூடிய பெரும் பாய்ச்சலை தமிழ்நாடு நிகழ்த்த வேண்டும். இந்தியாவிலேயே உயர் கல்வி படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் தான் அதிகம் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். இந்திய அளவில் சராசரியாக 26% என்று சொன்னால், தமிழ்நாட்டில் 47% என்ற அளவில் இருப்பதாகத் தான் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அப்படி இருக்கும்போது நமது மாணவர்களும், மாணவிகளும் உயர்கல்விக்குப் போகும்போது சாதாரண வேலைவாய்ப்புகள் அல்லாமல், அவர்களுக்கு உண்டான உயர்ந்த வேலை வாய்ப்புகள். ஒருபக்கம் - சுமாராகப் படிப்பவர்களுக்கு அல்லது டிகிரி படித்தவர்களுக்கான வேலைவாய்ப்பும், Highly Technical Qualify ஆகியிருப்பவர்களுக்கு உயர்ந்த சம்பளம் வரக்கூடிய அதிக வருமானம் வரக்கூடிய வேலைவாய்ப்புகள். High Paying Job என்ற வாய்ப்புகள் வரக்கூடிய RND போன்ற துறைகளில் வேலை செய்வதற்கு உலக அளவில் பெரிய, பெரிய நிறுவனங்கள் என்ன செய்கிறார்கள் என்றால், அவர்களின் ஆராய்ச்சிப் பணிகளை இந்தியாவை நோக்கி நகர்த்திக்கொண்டிருக்கிறார்கள். ஏன் என்றால், ஒன்று இங்கு Talent Pool அதிகமாக இருப்பது. இரண்டாவது இவ்வளவு Talent இருக்கும் இடங்கள் உலகத்தில் வேறு எங்கும் இல்லை என்ற அடிப்படையில் இந்தியா உலகத்திற்கே உண்டான Global Capability Centres என்பது இந்தியாவில் பெரிய அளவில் நிறுவப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பெரு முயற்சி!

அதில், குறிப்பாக பெங்களூர், ஹைதராபாத், புனே போன்ற இடங்கள் முன்னணியில் இருக்கும்போது தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளாக நாம் பெருமுயற்சி செய்து 40, 50 என்று இருந்த Global Capability Centres-இன் எண்ணிக்கை இப்போது 150-க்கும் மேலாக உயர்த்தியிருக்கிறோம். அப்போது எதிர்காலம் இன்னும் என்னவான வாய்ப்புகளை வழங்குகிறது. அதற்கு நாம் என்னவெல்லாம் செய்ய வேண்டும். இன்னும் பல நிறுவனங்களை எப்படி ஈர்ப்பது என்பது குறித்தும் அந்த ஆய்வை மேற்கொண்டு அந்த ஆய்வின் அறிக்கையும் கொடுத்திருக்கிறோம்.

மேற்கண்ட 4 அறிக்கைகள் தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த நான்கு அறிக்கையையும் ஒன்றாக இணைத்துப் பார்த்தீர்களென்றால், முதலமைச்சர் அவர்கள் வைத்திருக்கும் இலக்கான 1 டிரில்லியன் பொருளாதாரம் என்ற இலக்கினை நோக்கிச் செல்வதற்கு வெவ்வேறு துறைகளில் நாம் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது என்பதையும், அதே சமயத்தில் 1 டிரில்லியன் பொருளாதாரம் அடையும்போது அது எல்லோருக்குமானதாக இருக்க வேண்டும், எல்லோரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பதையும் உறுதி செய்வதற்காகதான் SDG (Sustainable Development Goals) அதற்கான ஆய்வறிக்கையும் தயாரித்து வழங்கியிருக்கிறோம். அது குறித்துதான் இன்று வழங்கியிருக்கும் ஆய்வறிக்கை ஆகும். அதன் சாராம்சமும் இது தான்.

இவ்வாறு ஜெ.ஜெயரஞ்சன் செய்தியாளர்களிடம் கூறினார்.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

"அன்னம் தரும் அமுதகரம்" 110 வது நாள்!

வில்லிவாக்கம் மேற்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஜூன் 10 -

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 110 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (09.6.2026) வில்லிவாக்கம் மேற்கு பகுதி: 1) வட்டம் 94 ஆ- ஜெகநாதன் நகர், சென்னை. 2) வட்டம் 94 அ - பாரதி நகர் முதல் தெரு.

சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ. ஜெயின், வே. வாசு, லதா வாசு.எம்.சி. டி.வி. செம்மொழி.எம்.சி. சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன்.எம்.சி வானவில் விஜய், எம்.சுரேஷ் வில்லிவாக்கம் மேற்கு / கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சி.சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமாசங்கர், சொ.முருகேசன், ப.லோகு பாபு, ஜெ.தங்கராஜ், எ. வேதா, சீ.விக்னேஷ், ச. மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி. விஜயகுமார், ம.அசோக்குமார், எல். சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி
மண்டலம்-12
ம. அ. 12. ந. க. எண். இ1 / 2107 / 2025

குறுகிய கால மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு

மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் / மண்டலம் - 12 அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

மண்டலம்-12 - பகுதி-37- வார்டு-165 நங்கநல்லூர் ராம் நகர் 2வது பிரதான சாலை, புதிய நிழற்கூடம் **(Shelter)** அமைக்கும் பணி (சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி)

பணியின் தோராய மதிப்பு ரூ. **78,24,008.41**	பணியின் முன்வைப்பு தொகை: ரூ.**79,000/-**

ஒப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : **20.06.2025** அன்று மாலை **3.00 P.M.** மணி வரை

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **23.06.2025** அன்று மாலை **3.30 P.M.** மணி

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் பார்த்து தெரிந்து கொள்ளவும்.

செ.ம.தொ.இ / 2897 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் / ம- 12**

காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி, திருக்காலிமேடு, அரசு உயர்நிலைப் பள்ளியில் நபார்டு நிதியின் கீழ் ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பள்ளி வகுப்பறை கட்டிடத்திற்கு சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. நேற்று (09.06.2025) பணிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில், மேயர் மகாலட்சுமி யுவராஜ், பகுதிக் கழக செயலாளர் எஸ். சந்துரு, சு.வெங்கடேசன், துணை மேயர் குமரகுருபரன், முதன்மை கல்வி அலுவலர் வெற்றிசெல்வி, பொதுப்பணித்துறை பொறியாளர்கள், கழக நிர்வாகிகள் ஏ.எஸ். முத்துசெல்வம், கோ. எல்லப்பன், வி.கோவிந்தராஜ், பா. மோகன், மாமன்ற உறுப்பினர்கள் ப. சுரேஷ், ஏ. சரவணன், அ.யுவராஜ், இளைஞரணி நிர்வாகிகள் பார்த்திபன், அஸ்வின், ஆர்.ஏ.மணிகண்டன், மாதவன், அஜய், அப்பு, மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.

காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி :

ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் பள்ளி வகுப்பறைகள் கட்டிடம்!

சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. பணிகளை தொடங்கி வைத்தார்

காஞ்சிபுரம், ஜூன் 10 -

காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி, திருக்காலிமேடு, அரசு உயர்நிலைப் பள்ளியில் நபார்டு நிதியின் கீழ் ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பள்ளி வகுப்பறை கட்டிடத்திற்கு காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் நேற்று (09.06.2025) அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில், மாநகராட்சி மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், பகுதிக் கழக செயலாளர் எஸ். சந்துரு, சு. வெங்கடேசன், காஞ்சிபுரம் மாநகராட்சி துணை மேயர் குமரகுருபரன், யமஹா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலர், மேலாண்மை இயக்குநர், முதன்மை கல்வி அலுவலர் திருமதி வெற்றி செல்வி, பொதுப்பணித்துறை பொறியாளர்கள், கழக நிர்வாகிகள் ஏ.எஸ். முத்துசெல்வம், கோ.எல்லப்பன், வி.கோவிந்தராஜ், பா.மோகன், மாமன்ற உறுப்பினர்கள் ப. சுரேஷ், ஏ. சரவணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அ. யுவராஜ், இளைஞரணி நிர்வாகிகள் பார்த்திபன், அஸ்வின், ஆர்.ஏ. மணிகண்டன், மாதவன், அஜய், அப்பு, மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் காணொலி வாயிலாக திறந்து வைத்த திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து திருவள்ளூர் நகராட்சி வார்டு எண் 17 – ல்அமைக்கப்பட்ட நியாய விலை கடையில் மக்கள் பயன்பாட்டிற்கான வீட்டு உபயோக பொருட்களை விநியோகம் செய்யும் பணியினை சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் நகர செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், நகர் மன்ற தலைவர் உதய மலர் பாண்டியன், ஒன்றிய செயலாளர் எஸ்.மகாலிங்கம், முன்னாள் நகர் மன்ற தலைவர் பொன்.பாண்டியன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.ஆர்.திலீபன், நகரக் கழக நிர்வாகிகள் எம்.பரசுராமன், தி.அரிஷ் குமார் , மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் த.அயூப் அலி, கு.பிரபாகரன், பா.ராஜி, கே.வீனஸ், நகர் மன்ற உறுப்பினர்கள் இரா. விஜயகுமார், வி.இ.ஜான், டி.என்.பன்னீர்செல்வம், சுனில் குமார், கிளைக் கழக நிர்வாகிகள் எஸ். செந்தில்குமார், உலகநாதன், என்.அன்பு உள்ளிட்ட கழகத் தோழர்கள், பொதுமக்கள் பங்கேற்றனர்.